# வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி
மாநிலச் செய்திகள்
வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி-15.8.2026 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, டெல்லி செங்கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களிடையே உரையாற்றினார்.

கடந்த 10 ஆண்டுகளில் 70 சதவிகித ரயில் வழித் தடங்கள் மின் மயமாக்கப் பட்டுள்ளதாக பிரதமர் தமது சுதந்திர தின உரையில் தெரிவித்தார்.

புதுச்சேரியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல்துறையின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

புதுச்சேரி சட்டப்பூர்வ பரிமாற்ற நாளை முன்னிட்டு கீழுர் நினைவு மண்டபத்தில் தியாகிகளுக்கு நாளை அஞ்சலி செலுத்தப்படுகிறது.

## மோடி

இந்தியா தனது 80-ஆவது சுதந்திர தினத்தை இன்று கோலாகலமாக கொண்டாடுகிறது. டெல்லி செங்கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி, தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களிடையே உரையாற்றினார். கடந்த 12 ஆண்டுகளில் கோடிக் கணக்கான குடிமக்கள் உறுதியுடனும், அர்ப்பணிப்புடனும் நாட்டை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்ல சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதாக கூறினார். 25 கோடிக்கும் மேற்பட்டோர் வறுமையில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்த பிரதமர் விரைவான பொருளாதா வளர்ச்சியை கண்டு வரும் நாடாக இந்தியா திகழ்கிறது என்றும் குறிப்பிட்டார்.

பிரதமரின் உரையில் இருந்து மேலும் சில தகவல்கள்.......

1925 முதல் சென்ற 90 ஆண்டுகளில் 30 சதவிகித ரயில் வழித் தடங்கள் மட்டுமே மின்மயமாக்கப் பட்டதாகவும் ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் 70 சதவிகித ரயில் வழித் தடங்கள் மின் மயமாக்கப் பட்டுள்ளதாக பிரதமர் தமது சுதந்திர தின உரையில் கூறினார். மேலும் ரயில்வே மின் மயமாக்கலால் டீசல் இறக்குமதி குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். 5 புதிய அணு உலைகள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அடுத்த 10 ஆண்டுகளில் இவற்றை தொடங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளதாகவும் கூறினார். 2047-ஆம் ஆண்டிற்குள் 100 ஜிகாவாட் அணுசக்தி என்ற இலக்குடன் நாடு முன்னேறி வருவதாகவும் பிரதமர் கூறினார். குழாய் எரிவாயு இன்று 1.75 கோடி வீடுகளை அடைந்துள்ளது, என்று குறிப்பிட்ட பிரதமர் மாற்று எரிசக்தி ஆதாரங்களை பயன்படுத்துவதில் இந்தியா முன்னேறி வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும் 40 நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இந்தியா மேற்கொண்டுள்ளதை சுட்டிக்காட்டிய பிரதமர் இதன் மூலம் ஏற்றுமதியாளர்களுக்கும், தொழில் துறையினருக்கும் எண்ணற்ற வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார். சிறு-குறு தொழில் துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். மேற்கு ஆசியாவில் ஏற்பட்ட பதற்றம் காரணமாக பெட்ரோல், டீசல், எல்பிஜி கிடைக்காது என்ற நிலை ஏற்பட்ட போதும் நமது நடவடிக்ககளால் இன்று நாட்டில் எரிபொருள், எரிவாயு, மற்றும் யூரியா பற்றாக்குறை இல்லை என்றும் திரு மோடி கூறினார்.

பிரதமர் தமது உரையில் மேலும் கூறுகையில் நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் பாதுகாப்பு தளவாடங்களின் உற்பத்தி 4 மடங்கு அதிகரித்துள்ளதாகவும், மின்னணு உற்பத்தி 7 மடங்கும், மொபைல் போன் உற்பத்தி 33 சதவிகிதம் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். டிஜிட்டல் பரிவர்த்தனைகள் 100 சதவிகிதம் உயர்ந்துள்ளதாக தெரிவித்த அவர் காதி மற்றும் குடிசை தொழில் பொருட்களின் உற்பத்தி 5 மடங்காக அதிகரித்துள்ளது என்று கூறினார்.

முன்னதாக, சுதந்திர தின விழாவின்போது முதன் முறையாக செங்கோட்டையில் வந்தே மாதரம் தேசிய பாடல் இசைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 21 குண்டுகள் முழங்க பிரதமர் திரு மோடி தேசியக் கொடியை ஏற்றிய போது விமானப் படைக்கு சொந்தமான இரண்டு Mi-17 ரக ஹெலிகாப்டர்கள் மூலம் வானில் இருந்து வண்ண மலர்கள் தூவப்பட்டன.

செங்கோட்டையில் முதல் முறையாக வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட்டதன் மூலம் ஒட்டு மொத்த தேசமும் பெருமிதம் அடைந்ததாக மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார். மேலும் பிரதமர் தமது உரையில் இளையோர்

நலனுக்கான திட்டங்களை அறிவித்துள்ளதையும் சமூக வலைதளப் பதிவில் சுட்டிகாட்டி உள்ளார்.

## நெய்வேலி

நாட்டின் 80-ஆவது சுதந்திர தின விழா நெய்வேலி என் எல் சி இந்தியா நிறுவனம் சார்பில் பாரதி விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் நிலக்கரி அமைச்சக கூடுதல் செயலரும் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண் இயக்குநருமான திரு சனோஜ் குமார் ஜா, தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர் 2026-27-ஆம் நிதியாண்டிலும் என்எல்சியின் வளர்ச்சி பயணம் தொடர்கிறது என்று கூறினார். முந்தைய ஆண்டின் இதே காலாண்டுடன் ஒப்பிடுகையில் மின் உற்பத்தி 25 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

## ரங்கசாமி

இந்தியாவின் 80-ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் வகையில் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அங்குள்ள முதலமைச்சர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டனர்.

புதுச்சேரி கடற்கரை சாலை காந்தி திடலில் நடைபெற்ற சுதந்திர தின விழாவை முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல்துறையின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டு உரையாற்றினார். அப்போது பேசிய அவர் சாலை, குடிநீர், மின்சாரம், தொழில், கல்வி, சுகாதாரம், மீன்வளம், போக்குவரத்து, மற்றும் சுற்றுலா உள்ளிட்ட துறைகளில் வளர்ச்சிப் பணிகளை வேகப்படுத்தி மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதே அரசின் முக்கிய நோக்கம் என்று கூறினார். பிரதமரின் சூரிய வீடு மின்சார திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் இதுவரை 4 ஆயிரத்து 896 வீடுகளில் சூரிய மின் தகடுகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கென 31.57 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு ரங்கசாமி தெரிவித்தார். மேலும் மின்சார கட்டமைப்பை வலுப்படுத்த புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பது உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

அங்கன்வாடி மையங்கள் மூலம் குழந்தைகள், கர்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஆண்டு முழுவதும் ஊட்டச் சத்து மிக்க உணவுகள் வழங்கப்பட்டு வருவதாகவும் கூறிய முதலமைச்சர் தேசிய உணவு பாதுகாப்பு திட்டங்களால் 6 லட்சத்து 33 ஆயிரத்து 912 பேர் பயன் அடைந்து வருவதாகவும் இதற்காக 16.23 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

முதலமைச்சர் திரு ரங்கசாமி தமது சுதந்திர தின உரையில் தெரிவித்த கூடுதல் தகவல்கள்

(வாய்ஸ்-ரங்கசாமி)

புதுச்சேரி கடற்கரை காந்தி திடலில் நடைபெற்ற சுதந்திர தின விழாவை முதலமைச்சர் திரு ரங்கசாமி வீர தீர செயல் புரிந்தவர்களுக்கு விருதுகளையும், பதக்கங்களையும் வழங்கி கவுரவித்தார். அணி வகுப்பில் சிறப்பாக செயல்பட்ட மாணவ-மாணவிகளுக்கும் பள்ளி நிர்வாகத்திற்கும் பரிசுகளை வழங்கினார். விழாவில் மாணவ-மாணவிகளின் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

சுதந்திர தினக் கொண்டாட்டங்களில் சட்டப்பேரவைத் தலைவர், அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள், அரசு அதிகாரிகள், மற்றும் பொது மக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாநிலம் முழுவதும் 500-க்கும் மேற்பட்ட காவலர்கள், பல்வேறு இடங்களில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

காரைக்கால் சர்தார் வல்லபாய் பட்டேல் சாலையில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் வேளாண் துறை அமைச்சர் திரு ஜி என் எஸ் ராஜசேகரன், தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். விழாவில் மாவட்ட ஆட்சியர் திருமதி இஷிதா ராட்டி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு வினய் குமார் கட்ஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஏனாம் ஜிஎம்சி பாலயோகி மைதானத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் பொது பணித் துறை அமைச்சர் திரு மல்லாடி கிருஷ்ணராவ் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். விழாவில் மண்டல நிர்வாக அதிகாரி திரு சிவராஜ் மீனா, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாகேயில் உள்ள கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் குடிமைப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு சிவக்கொழுந்து கலந்து கொண்டு, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். நிகழ்ச்சியில் மண்டல நிர்வாக அதிகாரி திரு அன்கித் குமார், காவல்துறை உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கீழூர்

புதுச்சேரி சட்டப்பூர்வ பரிமாற்ற நாளை முன்னிட்டு, நாளை காலை 8.45 மணியளவில், புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு. அன்பழகன், அமைச்சர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கீழூர் வாக்கெடுப்பில் கலந்து கொண்ட சுதந்திர போராட்ட வீரர்களின் தியாகத்தைப் போற்றும் விதமாக, புதுச்சேரி, கீழூர் நினைவு மண்டபத்தில் மரியாதை செலுத்துகிறார்கள். இந்நிகழ்ச்சியில், முதலமைச்சர் தேசிய கொடியை ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றுகிறார்.

## கலை விழா

புதுச்சேரி அரசு கலை-பண்பாட்டுத் துறை, தஞ்சை தென்னக பண்பாட்டு மையம் ஆகியவை காரைக்கால் மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து நடத்தும் புதுச்சேரி கலை விழா 2026, இன்றும் - நாளையும் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை நடைபெற உள்ளது. காரைக்கால் கடற்கரை திடல் மற்றும் திருநள்ளாறில் உள்ள ஆன்மிகப் பூங்கா ஆகிய 2 இடங்களில் நடைபெறும் இவ்விழாவில் உள்ளூர் கலைஞர்கள் மட்டுமின்றி மகாராஷ்டிரா, குஜராத், கேரளம் மற்றும் தெலங்கானா மாநிலங்களைச் சேர்ந்த கலை குழுக்களின் கலை நிகழ்ச்சிகள் இடம் பெற உள்ளன என்று புதுச்சேரி அரசு கலை பண்பாட்டுத் துறை தெரிவித்துள்ளது.

## அட்டாரி-வாகா எல்லை

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசில் அமைந்துள்ள சர்வதேச சிறப்பு வாய்ந்த அட்டாரி வாகா எல்லை சோதனைச் சாவடியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் எல்லைப் பாதுகாப்பு படையின் துணை தலைமை இயக்குநர் திரு எஸ் எஸ் ச்சந்தள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து எல்லைப் படை வீரர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

## பிஎஸ்என்எல்

சுதந்திர தினத்தை முன்னிட்டு பிஎஸ்என்எல் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு சிறப்பு சலுகைகளை அறிவித்துள்ளது. ஒரு ரூபாய்க்கு சிம் வழங்கும் Freedom Plan அறிமுகப்படுத்த பட்டுள்ளது. இதில் ஒரு நாளைக்கு ஒரு ஜிபி டேட்டா, 100 எஸ்எம்எஸ் மற்றும் வரம்பற்ற குரல் அழைப்புகள் என 24 நாட்களுக்கு வழங்கப்படும். இந்த சலுகை இம்மாதம் 12-ஆம் தேதி முதல் செப்டம்பர் 12-ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரிபெய்டு மற்றும் ஓடிடி உள்ளிட்ட திட்டங்களுக்கும் சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் தொலைதூர மற்றும் அடர்ந்த வனப்பகுதிகளில் பயன்படுத்தக் கூடிய சேட்டிலைட் போன் சேவையை விரிவுபடுத்தி வருவதாகவும் பிஎஸ்என்எல் தெரிவித்துள்ளது.

## நிலநடுக்கம்

இந்தோனேசியாவில் புளோரஸ் பகுதியில் இன்று அதிகாலை 7.7 ரிக்டர் அளவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் குறைந்தது 20 பேர் உயிர் இழந்தனர். 6 பேர் காயம் அடைந்தனர். மற்றும் இருவர் காணாமல் போய் உள்ளனர். இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பல அதிர்வுகள் ஏற்பட்டதாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் கூறி உள்ளது. நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கட்டடங்கள் இடிந்து விழுந்துள்ளதாகவும், கடுமையாக சேதம் ஏற்பட்டுள்ளதாகவும்

தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு நரேந்திர மோடி, டெல்லி செங்கோட்டையில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, நாட்டு மக்களிடையே உரையாற்றினார்.

கடந்த 10 ஆண்டுகளில் 70 சதவிகித ரயில் வழித் தடங்கள் மின் மயமாக்கப் பட்டுள்ளதாக பிரதமர் தமது சுதந்திர தின உரையில் தெரிவித்தார்.

புதுச்சேரியில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் திரு ரங்கசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து காவல்துறையின் அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

புதுச்சேரி சட்டப்பூர்வ பரிமாற்ற நாளை முன்னிட்டு கீழூர் நினைவு மண்டபத்தில் தியாகிகளுக்கு நாளை அஞ்சலி செலுத்தப்படுகிறது.

-------------------------